முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2023 சனவரி

## (103) பொருளியல்

(Economics)

2023-03-04
பிற்பகல்
[2.00 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றில் காணிக்கான வெகுமதியாக (reward for land) அமைவது எது?

(1) இலாபம் (2) வாடகை (3) வட்டி (4) கூலி

**1.2** நியம (Normative) பொருளாதாரக் கூற்றுடன் தொடர்புடைய கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக:

**(a)** இது ‘‘என்ன நடைபெற வேண்டும்’’ என்பது தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்துகிறது.

**(b)** இது தனிநபர்களின் உள்ளார்ந்த மதிப்பு தீர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டது.

**(c)** இது உண்மை உலகில் காணப்படக்கூடிய விடயங்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் ஊடாக பரீட்சிக்கப்படலாம்.

மேலுள்ளவற்றில், சரியான கூற்று /கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

**1.3** 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைக்கிணங்க, 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் :

(1) 2.3%. (2) 3.1%. (3) 3.7%. (4) 4.5%.

**1.4** கீழ்வருவனவற்றில் எது பூச்சிய – சந்தர்ப்பச் செலவு பற்றிய ஒரு **விவரணமன்று**?

(1) வளங்களின் அரிதானதன்மை இல்லாதபோது.

(2) உற்பத்திச் செயன்முறையில் வெளியீடொன்று காணப்படும்போது.

(3) வளங்கள் மாற்றுப் பயன்பாடுகளைக் கொண்டிராதபோது.

(4) தொழிற்படுத்தப்படாத வளங்கள் பொருளாதார நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும்போது

**1.5** கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக :

**(a)** கேள்விக் கணியமும் நிரம்பல் கணியமும் சமனாக உள்ளன.

**(b)** போட்டிச் சந்தையில் செயல்படுகின்ற கொள்வனவாளர்களினதும் விற்பனையாளர்களினதும் எதிர்பார்ப்புகள் பொருந்துகின்றன.

**(c)** மிகையான கேள்வி அல்லது நிரம்பல் காணப்படுகிறது.

**(d)** விலை மாற்றமடைவதற்கான ஏதுநிலைகள் காணப்படவில்லை.

மேலுள்ளவற்றில், சந்தைச் சமநிலையைத் **தவறாக** விபரிக்கும் கூற்று / கூற்றுக்களாவன :

(1) **(c)** மாத்திரம். (2) **(d)** மாத்திரம்.

(3) **(c)** யும் **(d)** யும் மாத்திரம். (4) **(b)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.

**1.6** **Y** என்ற பண்டத்தின் விலை ரூபா 75/- இலிருந்து ரூபா 125/- ஆக அதிகரிக்கும்போது, **X** என்ற பண்டத்தின் கேள்விக் கணியம் 4,000 இலிருந்து 2,500 ஆகக் குறைவடைகிறது. பண்டம் **X** உம் **Y** உம் நிரப்புப் (complementary) பண்டங்களாக இருப்பின், பண்டம் **X** இற்கும் **Y** இற்கும் இடையிலான கேள்வியின் குறுக்கு விலை நெகிழ்ச்சி (cross price elasticity):

(1) 0.5625. (2) – 0.5625. (3) – 1.778. (4) 1.778.

**1.7** கீழ்வருவனவற்றில், உள்நாட்டு நெற்செய்கையாளர்களைப் பாதுகாக்கும் முயற்சி எது?

(1) அரிசி மீதான உயர்ந்தபட்ச விலைக் கட்டுப்பாடு.

(2) நெல் மீதான குறைந்தபட்ச விலைக் கட்டுப்பாடு.

(3) நெல் உற்பத்தி மீது வரி விதித்தல்.

(4) இறக்குமதி செய்யப்படும் அரிசி வர்க்கங்கள் தொடர்பில் துணை நிறுவனமொன்றை ஏற்படுத்தல்.

**1.8** கீழ்வருவனவற்றில் அதிகரிக்கின்ற அளவுத்திட்ட விளைவை உருவாக்கும் ஒரு காரணி **அல்லாதது** எது?

(1) முகாமைத்துவப் பிரச்சினைகள்.

(2) உற்பத்திக் காரணிகளின் பிரிபடாத்தன்மை (indivisibility).

(3) தொழினுட்ப ரீதியில் மேம்பட்ட இயந்திரங்களைப் பயன்படுத்துதல்.

(4) ஒரு தடவை மாத்திரம் செய்யப்பட வேண்டிய செலவுகள் இருத்தல்.

**1.9** கீழ்வருவனவற்றில், நிறைபோட்டிச் சந்தையொன்றில் இயங்கும் நிறுவனமொன்று தொடர்பில் **தவறான** கூற்று எது?

(1) எந்தவொரு நிறுவனமும் பொருளாதார இலாபத்தை ஈட்டிக்கொண்டு, சந்தையில் தொடர்ந்தும் இயங்கலாம்.

(2) நீண்டகால ஓட்டத்தில் சாதாரண இலாபங்களை ஈட்டலாம்.

(3) சந்தையிலிருந்து வெளியேறுவதற்குத் தடைகள் காணப்படுகின்றன.

(4) ஓரினத்தன்மையான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**1.10** வணிகச் சுழற்சியில் தொய்வு நிலையிலிருந்து (trough) உச்ச நிலை (peak) வரைக்குமான காலப்பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) சோர்வு (2) விரிவாக்கம்

(3) பொருளாதார இடைவெளி (4) வெளியீட்டு இடைவெளி.

*இல.* **1.11** *மற்றும்* **1.12** *ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** **X** மற்றும் **Y** ஆகிய பொருள்களுக்கிடையிலான கேள்வியின் குறுக்கு விலை நெகிழ்ச்சி ................. *(நேர்மறை [positive] / எதிர்மறை [negative])* ஆக இருப்பின், அந்தப் பொருள்கள் பிரதியீட்டுப் பொருள்கள் எனக் கருதப்படுகின்றன.

**1.12** ................. *(தனியுரிமைப் போட்டி / தனியுரிமை)* நிறுவனமானது நீண்ட கால ஓட்டத்தில் மாத்திரம் சாதாரண இலாபங்களைச் சம்பாதிக்கின்றது.

*கீழே* **1.13** *மற்றும்* **1.14** *இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.13** பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயங்களினதும் வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கேள்வி வைப்புகளினதும் திரட்டு (aggregate) விரிந்த பண நிரம்பல் ($M_2$) என அழைக்கப்படுகிறது.

**1.14** பொருளாதார முறைமை என்பது சமூகம் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தாபிக்கப்பட்ட ஒரு தொகுதிக் கோட்பாடுகளாகும்.

*1.15 தொடக்கம் 1.20 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.15** ''நுண்பாகப் பொருளியல்'' மற்றும் ''பேரினப் பொருளியல்'' ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.16** விலைக்கும் கேள்விக் கணியத்திற்குமிடையிலான நேர்மாறு (எதிர்மறை) தொடர்பை விளைவிக்கும் வருமான விளைவை (income effect) விபரிக்குக.

**1.17** ''தெரிவு'' மற்றும் ''சந்தர்ப்பச் செலவு'' ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** இலங்கை மத்திய வங்கியின் இரண்டு (02) பிரதான பணிகளைக் (main functions) குறிப்பிடுக.

**1.19** சமபயன் வளையி (indifference curve) என்றால் என்னவென்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.20** ''நிலைபேறான அபிவிருத்தி'' என்னும் பதத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) பண்டமொன்று தொடர்பில் தரப்பட்டுள்ள கீழ்வரும் கேள்விச் (Qd) சார்பு மற்றும் நிரம்பல் (Qs) சார்பு ஆகியவற்றைக் கவனத்திற் கொள்க :

$$Qd = 17 - 0.05p$$

$$Qs = -1 + 0.1p$$

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(ii) மேற்படி பண்டத்தின் வழங்குநர்களுக்கு ரூபா 30/- அலகு வரியொன்றை அரசாங்கம் விதிக்குமாயின், அலகு வரிக்குப் பின்னரான புதிய சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) நுகர்வோர் சமநிலை (consumer equilibrium) என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) பொருளாதாரப் பொருள்கள் மற்றும் பொருளாதாரமற்ற பொருள்கள் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி, சராசரி மாறும் கிரயத்தைக் (AVC) **கணிப்பிடுக** :

| **கணியம்** | **மொத்த மாறும் கிரயம் (TVC)** | **சராசரி மாறும் கிரயம் (AVC)** |
|---|---|---|
| 1 | 150 | |
| 2 | 250 | |
| 3 | 330 | |

(03 புள்ளிகள்)

(c) எல்லைக் கிரயம் (MC) மற்றும் எல்லை வருமானம் (MR) ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துவதற்கான இரண்டு (02) காரணங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) "2022 இன் தொடக்க மாதங்களில் ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் [Standard & Poor's (S&P)] இலங்கையின் நீண்ட கால இறையாண்மைக் கடன் மதிப்பீட்டை 'CCC+' இலிருந்து 'CCC' ஆகத் தாழ்த்தியுள்ளது".

**நீங்கள் செய்யவேண்டியது :**

கடன் மதிப்பீடு தாழ்த்தப்படுவதற்கு வழிவகுத்த இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(c) இலங்கையின் அதிக பணவீக்க நிலைமையானது நுகர்வோர் மீது ஏற்படுத்தக்கூடிய மூன்று (03) பின்விளைவுகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) டொலர்கள் தேவைப்படுவதற்கான இரண்டு (02) காரணங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **நாடு A** மற்றும் **நாடு B** என்பன **X, Y** என்ற இரு பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன. கீழ்வரும் அட்டவணை இரு நாடுகளினதும் கூலி அலகு ஒன்றினால் உற்பத்தி செய்யக்கூடிய பொருள் **X** மற்றும் **Y** இன் அலகுகளின் எண்ணிக்கைகளைக் காட்டுகிறது :

| பொருள் / நாடு | X (அலகுகள்) | Y (அலகுகள்) |
|---|---|---|
| **A** | 8 | 4 |
| **B** | 3 | 6 |

(i) ஒவ்வொரு பொருளினது உற்பத்தியிலும் எந்த நாடு முழு நயத்தைக் கொண்டிருக்கிறது என்பதை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(ii) ஒவ்வொரு பொருளினது உற்பத்தியிலும் எந்த நாடு ஒப்பீட்டு நயத்தைக் கொண்டிருக்கிறது என்பதை **விபரிக்குக.** *(கணிப்பீடுகளை ஆதாரமாகக் காட்டுக).* (04 புள்ளிகள்)

(c) சென்மதி நிலுவையில் (balance of payment) பதியப்படும் இரண்டு (02) வகையான கொடுக்கல் வாங்கல்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

(A) ஒரு வருட காலப்பகுதிக்கான பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | ரூபா மில்லியன் |
|---|---:|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 2,500 |
| அரசாங்க நுகர்வுச் செலவினம் | 5,000 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 4,500 |
| இருப்பு மாற்றங்கள் | 2,456 |
| ஏற்றுமதிகள் | 2,800 |
| இறக்குமதிகள் | 5,789 |
| வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம் | -50 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(i) மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில். (05 புள்ளிகள்)

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில். (03 புள்ளிகள்)

(iii) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(b) தேசிய வருமானக் கணக்கீட்டில், அடிப்படை விலை (basic price) என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(B) ஒரு நாட்டின் பொருளாதாரத்தை முகாமை செய்வதில் தொழிற்படுத்தப்படும் கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்கள் பேரினப் பொருளாதாரக் கொள்கைகளாகக் கருதப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

இரண்டு (02) பேரினப் பொருளாதாரக் கொள்கைகளை (macro-economic policies) **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(C) (a) அரசாங்கத்தின் மீண்டுவரும் செலவினம் (recurrent expenditure) என்பதாற் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(b) மீண்டுவரும் செலவினங்களின் இரண்டு (02) பிரதான வகைகளைக் (major types) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |